மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் 6 அலுவலகங்களில் கணிப்பொறி ஆக்குவதற்காக அரசு ஆணைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. படிப்படியாக மற்ற அனைத்து மாவட்டங்களுக்கும் வரும் ஆண்டுகளில் நிதிநிலையை அனுசரித்து செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. முனவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதையும் சிறந்த முறையில், சிறப்பான முறையில், நேர்மையான முறையில் செய்து வரும் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே இந்த ஆண்டு தர்மபுரி மாவட்டத் தலை நகரில் இந்த கணிப்பொறி நிறுவப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் தர்மபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை கணிப்பொறி மயமாக்க எந்தச் செயல்பாடும் அரசின் குறிப்பில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 76, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

76—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலுள்ள அரசு விவசாய கிடங்குகள்.

*11094—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், ஆரணி தொகுதி வேலப்பாடி, கண்ணமங்கலம், எஸ்.வி. நகரம், ஆதனூர் ஆகிய பகுதிகளில் உள்ள அரசு விவசாய கிடங்குகளிலிருந்து போலி பர்மிட்கள் மூலம் உரங்கள் எடுத்துச் செல்லப்பட்டு உர வியாபாரிகளுக்கு அதிக விலைக்கு விற்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1993 பிப்ரவரி 12]

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 77, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண் 78, திரு. கே. செல்வராஜ், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சிங்கை கோவிந்தராசு. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

78—

பச்சிளங் கைக்குழந்தைகளுக்கு ராகி மாவு, பால் பவுடர் ஆகியவைகள் இலவசமாக வழங்கும் திட்டம்.

*11818—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பச்சிளங் கைக்குழந்தைகளுக்கு ராகி மாவு, பால் பவுடர் இலவசமாகக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ராகி மாவு கொடுக்கப்படுகிறது. பால் பவுடர் இலவசமாகக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற சொல்லுக்கே இடமில்லாத நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் ஏழையெளியவர்களுக்காக சத்துணவுத் திட்டம் மூலம் பல்வேறு நலத் திட்டங்களைக் கொடுத்திருந்த போதிலும், கடந்தகாலத்தில் ஏழையெளிய குழந்தைகளுக்கு, பள்ளிகளிலே பயிலுகின்ற குழந்தைகள்வரை பால் பவுடர் திட்டம் வழங்கப்பட்டு வந்தது. அந்தத் திட்டத்தின் வாயிலாக தமிழகத்திலே இருக்கக்கூடிய நலிவுற்ற குழந்தைகளின் உடல், வளம் பெறுகின்ற வகையிலே அமைந்திருந்தது. அந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.